# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 39 INTERNATIONAL EDITOR : MICHAEL W.SMITH இதழ் - 39


## பொய்யரே எச்சரிக்கையாயிருங்கள்

அப்போ 5 : 1 – 11 ல் சொல்லப்பட்டுள்ள சம்பவத்தைக் காணலாம் பெந்தெகோஸ்தே நாளுக்குப் பின்பு, புதிதாக சபையிலே சேர்க்கப்பட்ட அநேகர் தங்களுடைய நிலங்களையும், வீடுகளையும் விற்று விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப்பட்டது (அப்போ 4 : 35). அப்போஸ்தலருடைய உபதேசங்களைப் பின்பற்றி, ஜெபத்திலும் ஒருவரோடொருவர் உள்ள ஐக்கியத்திலும் இடைவிடாமல் இந்த பரிசுத்தவான்கள் யாவரும் எருசலேமில் வாசம் பண்ணினார்கள். எருசலேம் தவிர கிறிஸ்தவர்கள் வாழ்ந்த மற்ற பகுதிகளில் இந்த பகிர்ந்து கொடுத்தல் அனுசரிக்கப் படவில்லை. எருசலேமில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் மேல் இது வற்புறுத்தி செய்யப்பட வில்லை. மாறாக அவரவருடைய சொந்த விருப்பத்தின் பேரில், தேவனுடைய ஐக்கியத்திற்கென்று தாமாக மனமுவந்து செய்தார்கள்.

இந்தபிரகாரமாக , புதிதாக இரட்சிக்கப்பட்டோர் தங்களின் பொருட்களை விற்று கிடைக்கும் கிரயப்பணத்தை கொண்டுவந்து அப்போஸ்தலரிடத்தில் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பரலோகத்தை வாஞ்சித்து இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி தயாராகிக் கொண்டிருந்தனர். இந்த சிறப்பான ஐக்கியத்தின் நாட்களிலே அனனியா என்னும் பேருள்ள ஒருவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கை கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான். பேதுரு அவனை நோக்கி அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடைய தாயிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்ட தென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றார்.

அனனியா எதிர்பார்த்ததை போல அந்த நாள் நிறைவாக வில்லை அவனுடைய நித்தியம் தொடங்கியது அவனுடைய இருதயமும் பாவ வஞ்சனையால் நிறைந்தது. அவன் சபைக்கென கொண்டுவந்தது வெறும் கால்பாகம் மாத்திரமே, அவன் செய்த பாவம் பொய் சொல்லியது மற்றவர்கள் தன்னை நூறு சதவீதம் கொடுத்ததாக நினைக்க விரும்பி பொய்யினால் வஞ்சித்தான்



**பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?... நீ மனுஷரிடத்தில் அல்ல தேவனிடத்தில் பொய் சொன்னாய்**


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் மாட்டுக் கொட்டகை | வேதபாடம் நேர்மை | துணை கட்டுரை நேர்மையின் சட்டதிட்டங்கள் | கேள்வி & பதில் | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை காலியான தொட்டி |
| 3 | 4 | 5 - 6 | 7 | 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ;19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 :15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை**- அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேஷம் அறிவித்தல்**
மாற் 16 : 15

ஏனெனில் பேதுரு கூறுகையில் அனனியா தேவனிடத்தில் பொய் சொன்னான். ஆகவே தான் தேவனுக்கும் மனுஷருக்கும் பொய் எனும் பாவத்தினால் அவனுக்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டு மரணமடைந்தான். நடந்த சங்கதிகளை குறித்து ஜனங்கள் பயந்தார்கள் தேவனை வஞ்சித்ததால் வெளிப்பட்ட தேவனுடைய நியாயத்தீர்ப்பை தங்கள் கண்ணாரக் கண்டார்கள்.



**இன்று சபையிலுள்ள பொய்யர் மற்றும் நயவஞ்சகர் மேலும் இப்படிப்பட்ட நியாயத்தீர்ப்பு வருமானால் யார் நிலை நிற்பான்?**

ஜனக்கூட்டம் இந்த அதிர்ச்சியில் தங்களை சுயபரிசோதனை செய்து கொண்டு இருந்த போது வாலிபர் எழுந்து அனனியா உடலை யூதர்களுடைய முறைப்படி சேலையில் சுற்றி வெளியே எடுத்துக் கொண்டு போய் அடக்கம் பண்ணினார்கள் ஏறக்குறைய மூன்று மணி நேரத்திற்குப் பின்பு அவனுடைய மனைவி நடந்ததை அறியாமல் உள்ளே வந்தாள் பேதுரு அவளை நோக்கி, நிலத்தை இவ்வளவுக்குத் தானா விற்றீர்கள், எனக்குச் சொல் என்றார். அதற்கு அவள் இவ்வளவு தான் என்றாள். அவளிடம் கர்த்தருடைய ஆவியை சோதிப்பதற்கு நீங்கள் ஒருமனப்பட்டதென்ன? இதோ உன் புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது உன்னையும் வெளியே கொண்டு போவார்கள் என்றார். உடனே அவள் அவனுடைய பாதத்தில் விழுந்து ஜீவனை விட்டாள். அந்த வாலிபர் வந்து அவளையும் எடுத்துக்கொண்டு போனார்கள். வஞ்சிப்பதிலே ஒருமனப்பட்டு பாவம் செய்த இருவருக்கும் நேரிட்ட தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறித்து யாருக்கும் பயம் உண்டாயிற்று. சாலமோனுடைய மண்டபத்திலிருந்த யாவருக்கும் பயம் உண்டாயிற்று. ஜனங்கள் யாவரும் தங்களை தாங்களே சுய பரிசோதனை செய்து கொண்டார்கள்.

ஆனாலும் நீண்ட நாட்களாக அவர்கள் அதில் நிலைத்திருக்க வில்லை. இந்த சபையில் உள்ள பொய்யர் மற்றும் நயவஞ்சகர்கள் மேலும் இப்படிப்பட்ட நியாய தீர்ப்பு வருமானால் யார் நிலை நிற்பான்? இன்றைய சூழ்நிலையில் கிறிஸ்தவர்களில் பலர் யாருக்கும் உண்மையாக இல்லை. உண்மையிலேயே அனனியா சப்பீராள் செய்தது மிகப் பெரிய தியாகம் தான் ஆனால் அந்த தியாகத்தில் நேர்மை இல்லை. பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானது.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு வரப்போகிறது பாவத்தை விட்டு மனந்திரும்பாத யாவர் மேலும் நித்திய ஆக்கினை தீர்ப்பான மரணம் வர இருக்கிறது .சரியான கொள்கையும், நற்கிரியைகளும் மாத்திரம் ஒருவனை நீதிமானாக்காது. நீங்கள் கைவிடப்பட்டு போய்விடாதீர்கள் பொய்யரே எச்சரிக்கையாயிருங்கள் ■

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :-*

**ஆயர். W.S. வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# Editorial ஆசிரியரின் தலையங்கம்

எபி 13 : 18 – எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்; நாங்கள் நல்மனச்சாட்சி யுள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயித்திருக்கிறோம்.

அப்போஸ்தலராகிய பவுல் தான் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புவதால் எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள் என்கிறார். தேவனை சேவிக்கும் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய அனுதின வாழ்வில் நேர்மையாக நடக்கும் குணாதிசயத்தை தேவனே ஒவ்வொருவருக்கும் தரவேண்டும். நயவஞ்சனையற்ற பரிசுத்த வாழ்க்கை வாழவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார்.

இந்த இதழின் தலைப்பு நேர்மை. அடிப்படையிலேயே நமக்கு தெரிந்தது. கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அநேகர் பொய்யரும், திருடரும் வேசிக்கள்ளரும் வஞ்சிக்கிறவர்களுமாய் இருக்கிறார்கள். நேர்மையற்ற செயல்களை செய்திகளிலும், அரசியலிலும், விளையாட்டுகளிலும், தொழிலிலும் கூட பரவலாக இன்று பார்க்க முடிகிறது. பல சமுதாய நல்லுறவுகளை நேர்மையற்ற தவறான காரியங்கள் அழித்துக் கொண்டிருக்கிறது. பாவமுள்ள உலகில் தான் வாழ்கிறோம் ஆனால் கிறிஸ்தவர்களாகிய நமக்கு மத்தியில் பாவங்கள் இருக்கக் கூடாது. இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிற அவர்களுக்கு அடிப்படையான காரியம் நேர்மை.

சிலர் தாங்கள் கூறும் பொய்க்கும் காரணங்களை வைத்திருப்பார்கள் குழந்தைகளிடம் உரையாடுவது தொழில் காரியங்களின் போது, திருமணங்களில் பேசும் போது, தங்களுடைய வருமான வரியை பதிவு செய்யும்போது என பல நேரங்களில் பொய்யர் ஆகிறார்கள். தொடர்ச்சியாக பொய் கூறாவிட்டாலும் சில சமயங்களில் பொய் கூறுபவர்களும் உண்டு. தவறை ஒத்துக் கொண்டாலே போதும் பொய் கூற வேண்டிய சூழ்நிலை ஏற்படாது. நம் வார்த்தைகளில் எப்போதுமே கவனம் தேவை. நாம் சொல்லும் வார்த்தையின்படியே நம் செயல் தவறாது நேர்மையாக நடக்க பிரயாசப்படுவோம்.

நேர்மையான வாழ்வு என்பது ஆசீர்வாதமான வாழ்வு நாம் தவறுவது மனித இயல்பு, ஆனால் நேர்மையான வாழ்வில் ஒரு நிம்மதியும், சமாதானமும் உண்டு. இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் நேர்மையாகவும் கண்ணியத்துடனும் கர்த்தருக்குள் நடப்போம்.

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக

## மாட்டுக் கொட்டகை கதை

**அனாதையான ஏழைகளை பொறுப்பெடுத்து கவனிக்கிற ஒரு மனிதரை எனக்கு தெரியும். அழுக்கான இடங்களில் அடிப்படைத் தேவைகளோடு இருக்கும் அநேக பிள்ளைகள் உண்டு. அந்த குழந்தைகளை ஆதரிக்க வேண்டும் எனும் எண்ணம் எனக்குள் வந்தது. அந்த மனிதனைக் கொண்டு அந்த பிள்ளைகளுக்கு உதவலாம் எனும் எண்ணம் வந்தது. ஒருநாள் கறவை மாடு ஒன்றை வாங்கி அந்த மனிதனிடம் கொடுத்தால், அந்த குழந்தைகளுக்கு பால் கிடைக்க வழி கிடைக்கும் என்பதாக தோன்றியது. மேலும் மாட்டிற்கு மழை, வெயில் என்று பாதுகாப்பு கிடைக்க ஒரு கொட்டகை அமைக்க வேண்டும். ஆகவே அதற்கென்று அந்த மனிதனுக்கு ஏராளமான பணத்தை கொடுத்தனுப்பினேன். ஒருநாள் நான் அந்த இடத்தை பார்வையிட சென்றபோது, அங்கே மாட்டுக் கொட்டகையை தேடினேன். ஆனால் அதை அங்கே காணவில்லை அநேகருடைய கேள்வி அதுவே. பதில் அந்த மாட்டு கொட்டகை எங்கே?**

**லூக் 16 : 10 இயேசு சொன்னது போலகொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்.**



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : நேர்மை

**வேத வாசிப்பு :** பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம். நீதிமொழிகள் 12 : 22

**வரையறை :** நேர்மை என்பது உண்மையும், கீழ்ப்படிதலும் நல்லொழுக்கமுள்ள பண்பாடுகளை குறிப்பிடலாம். நேர்மையாக இருக்கப் பழக வேண்டும்.பொய், ஏமாற்றம், திருடுதல் இவற்றினின்று

**செய்திச் சுருக்கம் :** கர்த்தர் உண்மையும், நீதியும், பரிசுத்தமும் உள்ளவர்.கர்த்தர் அநீதியுள்ளவனை வெறுக்கிறார். வாழ்வின் எல்லா நிலைகளிலும் கிறிஸ்தவர்கள் நேர்மையாய் இருக்க வேண்டும் – வார்த்தையிலும், செயலிலும் நேர்மையின்மை என்பது ஒழுக்கக் கேடு அது நித்திய வாழ்வை அழித்துவிடும்.

### I.சத்தியமுள்ள தேவன்

**A.**உபாகமம் 32 : 4 சத்தியமுள்ள தேவன்

**B.** எபி 6 : 8 பொய்யுரையாத தேவன்

**C.**தீத்து 1 : 2 பொய்யுரையாத தேவன்

### II. வஞ்சகத்தின் பிறப்பிடம்

**A.**யோவான் 8 : 44 பிசாசானவன் பொய்யன்

**B.** எரேமியா 9 : 5-6 பொய்யைப் பேசத் தங்கள் நாவைப் பழக்குகிறார்கள்

### III. தேவன் அநீதத்தை வெறுக்கிறார்

**A.**நீதி 6 : 16 -17 கர்த்தர் வெறுக்கும் காரியங்களில் ஒன்று பொய்நாவு

**B.** சங் 101 : 7 கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை

**C.** நீதி 21 : 3 பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும், நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்.

### IV. பொய் சொல்லாதிருப்பாயாக எனும் கட்டளை

**A.**லேவி 19 : 11 -13 நீங்கள் களவு செய்யாமலும், வஞ்சனை பண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்

**B.** கொலோ 3 : 9 ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்

### V. பொய்சாட்சி

**A.**யாத் 20 : 16 பிறனுக்கு விரோதமாகப் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

**B.** நீதி 12 : 17 சத்தியவாசகன் நீதியை வெளிப்படுத்துவான் .

### VI. மெய்யைப் பேசுங்கள்

**A.**சங் 34 : 13 உன் உதடுகளைக் கபட்டு வசனிப்புக்கு விலக்கிக் காத்துக்கொள்

**B.** எபேசி 4 : 25 மெய்யைப் பேசக்கடவன்

### VII. பொய்யை களைந்து போடுங்கள், சத்தியம் பண்ணாதிருங்கள்

**A.**மத் 5 : 37 உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்

**B.** யாக் 5 : 12 பொய்யைக் களைந்து போடுங்கள்

### VIII. கர்த்தருக்குள் நேர்மையாய் நடப்போம்

**A.** சங் 15 : 1-3 மனதார சத்தியத்தைப் பேச வேண்டும்

**B.** 1 யோவான் 1 : 6 இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்.

**C.**பிலி 4 : 8-9 புண்ணியம் எதுவோ,புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்

### IX . நேர்மையின் வழிகாட்டுதல்கள்

**A.** 2கொரி 8 : 21 யோக்கியமானவைகளை செய்ய நாடுங்கள்

**B.** 2 கொரி 4 : 2 தந்திரமாய் நடவாமல்/ தேவ வசனத்தை புரட்டாமல்

**C.**அப்போ 24 : 16 குற்றமற்ற மனச்சாட்சியை உடையவன்

**D.** 1 பேதுரு 2 : 21-22 கிறிஸ்துவே மாதிரி – வஞ்சனை காணப்படவில்லை

### X . தலைமைத்துவத்தின் தகுதிகள்

**A.** யாத் 18 : 21 உண்மையுள்ள மனுஷரை தெரிந்து கொள்ளுங்கள்

**B.** அப் 6 : 3 நற்சாட்சி பெற்றிருக்கிறவரை தெரிந்து கொள்ளுங்கள்

### XI. ஏமாற்றுதல் / வியாபாரம் / வரி

**A.**நீதி 11 : 1 கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது

**B.** எரே 22 : 13 அநீதியினாலே தன் வீட்டைக் ட்டுகிறவனுக்கு ஐயோ

**C.** எசே 22 : 13 நீ அநியாயமாய் சம்பாதித்த பொருள்

**D.** ரோமர் 13 : 7-8 எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும் செலுத்துங்கள்

### XII. நேர்மையின் மதிப்பு

**A.** நீதி 16 : 8 நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம்

**B.** 1 பேது 3 : 17 நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மை

**C.** சங் 15 : 4 ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்

### XII. ஆசீர்வாதமும், நன்மையும்

**A.** யோவான் 8 : 32 சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

**B.** நீதி 12 : 19 சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும்.

**C.** 1 பேது 3 : 10 நல்ல நாட்களைக் காண

**D.** நீதி 16 : 13 நீதியுள்ள உதடுகள் ராஜாக்களுக்குப் பிரியம்

**D.** சங் 145 : 18 கர்த்தர் சமீபமாயிருக்கிறார்

### XIV. ஆசீர்வாதமும், நன்மையும்

**A.** லூக் 12 : 2 வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை

**B.** நீதி 19 : 5 பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை

**C.** வெளி 21 : 8 பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்

**முடிவு :**

பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக்கடவோம்- ரோமர் 13 : 13

# நேர்மையின் சட்டம்

**சர்வ லோகத்தையும் படைத்த இயேசு கிறிஸ்துவின் கற்பனைகளையும் கட்டளைகளையும் சரியாக பின்பற்ற இந்த சமுதாயம் தயக்கம் காட்டுகிறது. தேவனுடைய சட்டதிட்டங்களின் படி தான் இந்த உலகம் நியாயம் தீர்க்கப்படப்போகிறது.**



**பொய்யுரைத்தல் -வேண்டுமென்றே திட்டமிட்டு உண்மைக்கு புறம்பான காரியத்தை ஏமாற்றும் எண்ணத்தில் கூறுவது -பாவத்தின் பலன்**

### சத்தியமுள்ள தேவன்

மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தின் வாயிலாக மாத்திரம் பாவமானது குறிப்பிடப் படவில்லை. மாறாக மனுக்குலம் சிருஷ்டிக்கப்படும்போது பாவமும் மனுஷனுடைய இதயத்தில் முதன்முதலாய் தோன்றியது. ஆகவேதான் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் முன் மனசாட்சி சாட்சி பகிர்ந்தது. நீதியும், நியாயமுமே தேவனுடைய கற்பனைகளில் முக்கிய அம்சம். அநீதி என்பது (பொய், ஏமாற்றுதல், திருடுதல்) இவைகளை கர்த்தர் கற்பித்த கிறிஸ்தவ வாழ்வுக்கு எதிரானவைகள். தேவன் உத்தமமானவர், பரிசுத்தர், சத்தியமுள்ளவர், நீதியும் செம்மையுமானவர் (உபா 32 : 4). அவர் எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் (எபி 6 : 18). சத்தியபரனாகிய அவருடைய சுபாவத்திற்கு, அநீதியானது எதிர்மறையானது

### அநீதியின் பிறப்பிடம்

பொய் கூறுதலும், ஏமாற்றுதலும் பொதுவான பழக்கமாக எண்ணுகிறோம். இயேசு கிறிஸ்துவின் கூற்றுப்படி சாத்தானே பொய்யனும் பொய்க்கு பிதாவாக இருக்கிறான். சத்தியம் அவனிடத்தில் இல்லை (யோவான் 8 : 44) . எரேமியா 9 : 5 -6 கூறுகிறது, கர்த்தரை விட்டு விலகின ஜனங்கள் தமக்கடுத்தவனை ஏய்க்கிறார்கள். பொய் பேச தங்கள் நாவை பழக்குகிறார்கள்.சத்தியமில்லாததை தங்கள் மாம்சத்திலிருந்தும், அசுத்தமான இருதயத்தினின்றும் மற்றவர்களிடம் பேசும் படி சாத்தான் இவர்களை வஞ்சிக்கிறான்.

### பொய் கூறுதலுக்கு எதிரான கட்டளைகள்

ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார் அவைகளில் ஒன்று பொய் நாவு, என்று நீதி 6 : 16 இல் பார்க்கிறோம். ஒரு கிறிஸ்தவன் பொய்யை நியாயப்படுத்த அவர்களுக்கு இடம் இல்லை. பொய் சொல்கிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை(சங்கீதம் 101 :7). எந்த ஒரு பரிசுத்த கொள்கையும், நற்கிரியையும் அல்லது இறையியல் புரிந்து கொள்ளுதலோ மன்னிக்காது, பலியிடுவதைப் பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம் ( நீதி 21 : 3). பழைய ஏற்பாட்டு நியதிகள் தெளிவாக கூறுகிறது; நீங்கள் களவு செய்யாமலும் வஞ்சனை பண்ணாமலும் ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள் (லேவி 19 : 11 -13). அதுபோல கொலோ 3 : 9 ல் ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. தேவ பிள்ளைகளாகிய நாம் வஞ்சனையோடும் பொய் நாவோடும் வாழக்கூடாது.

### சத்தியத்தை பேசுங்கள்

பத்து கற்பனைகள் ஒன்று பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக (யாத் 20 : 16). சத்தியத்திற்குப் புறம்பான எதையும் தேவனுடைய கற்பனையை மீறி செய்வது பாவம். கிறிஸ்தவர்களுடைய செயல்களும், வார்த்தையும் நீதியுள்ளதாயும், நியாயமானதாயும் காணப்பட வேண்டும். உன் நாவை பொல்லாப்புக்கும், உன் உதடுகளை கபட்டு வசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள் (சங்கீதம் 34 : 13). பவுல், எபேசு சபைக்கு எழுதும்போது, ஒருவருக்கொருவர் பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன் (எபே 4 : 25).

### சத்தியம் பண்ணாதீர்கள்

ஜனங்களில் பலர் இவ்வாறாக கூறுவதுண்டு சத்தியமாக கூறுகிறேன் அல்லது நான் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். இவ்வாறாக கூறும்போது அது சத்தியமான வார்த்தை தானா? என்று சிந்திப்பதில்லை. தேவனுடைய பரிசுத்தவான்களே, வானத்தின்பேரிலாவது, பூமயின் பேரிலாவது , வேறெந்த ஆணையிலாவது சத்தியம் பண்ணாதிருங்கள். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லை என்று சொல்லக்கடவீர்கள்(யாக் 5 : 12). உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லை என்று சொல்லுங்கள் இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். (மத் 5: 37) .ஆகவே சத்தியம் பண்ணாதிருங்கள். ஒரு கிறிஸ்தவர், சொல்வது நீதியாயும், நியாயமாயுமிருக்கும் என்று சொல்லும் அளவுக்கு நம் வாழ்வு இருக்க வேண்டும்.




**ஒருவர் தம்மிலும், தேவனிலும் நேர்மையாய் நடக்கும்போதுதான் ஆவிக்குரிய வாழ்விலும் நியாயத்தீர்ப்பிலும் வெளிப்பட ஆயத்தமாக முடியும்**

யாராயிருந்தாலும், எந்த நிலைமையில் இருந்தாலும் மரியாதையோடும், நீதி நியாயத்தோடும், நடந்து கொள்ள வேண்டியது கிறிஸ்தவர்களாகிய நம் கடமை. கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம் (2 கொரி 8 : 21).

2 கொரி 4 : 2 ல் பவுல் பரிசுத்தவான்களுக்கு எழுதும் போது, தந்திரமாய் நடவாமலும் தேவ வசனத்தை புரட்டாமலும் சத்தியத்தை வெளிப்படுத்துகிறது, தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷனுடைய மனசாட்சிக்கும் எங்களை உத்தமர் என்றும் விளங்கப் பண்ணுகிறார் என்கிறார்.

கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின் வைத்துப் போனார். அவர் பாவம் செய்யவில்லை அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை 1 பேதுரு 2 : 21 – 22. பவுலைப் போல எப்பொழுதும் குற்றமற்ற மனசாட்சியை உடையவனாயிருக்க பிரயாசப்படுகிறேன் அப்போ 24 : 16.

## கர்த்தருக்கு முன்பாகவும், மனதாரவும் சத்தியமாய் நடவுங்கள்

கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து மனதார சத்தியத்தை பேசுகிறவன் தானே (சங்கீதம் 15 : 1-3). சில ஜனங்கள் தாங்கள் வாழ வேண்டிய கற்பனையான வாழ்வையே நிஜ வாழ்விலே பொய்யாக கூறிக் கொண்டிருப்பார்கள். இது ஆரோக்கியமானது அல்ல. நீதியுள்ளவைகளெவைகளோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள் (பிலி 4 : 8-9). மேலும் 1 யோவான் 1 : 6 சொல்கிறது, நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம். நய வஞ்சனையை தேவன் வெறுக்கிறார். உள்ளார்ந்த மனிதனிலும் ஆவிக்குரிய வாழ்விலும், நீதியும், உண்மையும் இருக்கவே தேவன் விரும்புகிறார். நாம் எல்லோரும் தேவனுடைய நியாயாசனத்துக்கு முன்பதாக நிற்க வேண்டும்.

## நீதியுள்ள தலைமைத்துவம்

நீதி, கிறிஸ்தவர்களுடைய அடிப்படைத் தேவை. ஏனெனில் சபையின் தலைமைப் பொறுப்புகளை வகிப்பதற்கு அதுவே தகுதியாகும். உண்மையுள்ளவர்களை தெரிந்து கொண்டு, அதிபதிகளாக ஏற்படுத்த வேண்டும் (யாத் 18 : 21). நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள் (அப்போ 6 : 3).

## ஏமாற்றுதல்/ வியாபாரம்/ வரிகள்

கிறிஸ்தவர்கள் எல்லா விதத்திலும் நீதி உள்ளவர்களாக காணப்பட வேண்டும் அதாவது வீடு, பள்ளிக்கூடம், வேலை செய்யும் இடம், தொழில், வரவு செலவுகள், அரசாங்க காரியங்கள் இன்னும் பற்பல காரியங்கள். ஏமாற்றுதல் எனும்போது அதற்குள் திருடுதல் மற்றும் பொய் ஆகிய இரண்டும் வந்து விடுகிறது. இதைத்தான் எரேமியா 22 : 13 ல் அநீதியினால் தன் வீட்டையும்,தன் மேலறைகளையும் கட்டி, தன் அயலான் செய்யும் வேலைக்குக் கூலி கொடாமல், அவனை சும்மா வேலை கொள்ளுகிறவனுக்கு ஐயோ. கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது; சுமுத்திரையான நிறைகல்லோ அவருக்குப் பிரியம் (நீதி 11 : 1). உண்மையான கிறிஸ்தவர்கள் தங்கள் கடனை திரும்ப செலுத்தவும், தங்களுடைய சொந்த வேலையைச் செய்யவும், ஒவ்வொரு தொழில் ரீதியான முடிவுகளிலும், சிறிதானதோ, பெரிதானதோ, நேர்மையாய் நடந்து கொள்ள வேண்டும். எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள் (ரோமர் 13 : 7 -8). கிறிஸ்தவர்களுடைய செயல்கள் எப்போதும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.நேர்மைக்கு மாறாக நடப்பது பாவம்.

## நேர்மையின் சிறப்பு

நேர்மையை கனம்பண்ணும் தருணங்கள் கண்டிப்பாக நேரிடும்.சங் 15 : 4 கூறுகிறது கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான்.அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும் நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம் (நீதி 16 : 8).

## நியாயத்தின் மதிப்பு

சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8 : 32).சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும் (நீதி 12 ; 19).நீதியுள்ள உதடுகள் ராஜாக்களுக்குப் பிரியம். நிதானமாய்ப் பேசுகிறவனில் ராஜாக்கள் பிரியப்படுவார்கள் (நீதி 16 : 13).ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டு மென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும் கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து (1 பேது 3 : 10). தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய் தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (சங் 145 : 18).

## நேர்மையின்மையின் விளைவுகள்

வெளியாக்கப்படாத மறைபொருளுமில்லை. அறியப்படாத இரகசியமுமில்லை(லூக் 12 : 2). பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை (நீதி 19 : 5).பொய்யர் அனைவரும் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (வெளி 21 : 8).தேவனுடைய வார்த்தைக்குச் செவிசாய்த்து, தியானிப்போம். நயவஞ்சனை யின்றி நேர்மையாய் வாழ்வோம்.■




**வேதாகமம் தார்மீகக் கொள்கைகளை ஆதரிக்கவில்லை.தேவனுடைய சத்தியம் முழுமையானது.பொய் என்பது இயற்கையாகவே தவறான சுபாவம்.**

### ஒரு பெரிய நன்மைக்காக பொய் சொல்லலாமா?

இறையியல் சார்ந்து, சில தருணங்களில், நியாயமான காரணத்திற்காக பொய் சொல்லும் சில காட்சிகளைக் காணலாம்.எப்படியாயினும் 1 பேது 3 : 10 தெளிவாக கூறுகிறது.ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காண வேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவை விலக்கிக் காத்துக் கொள்ள வேண்டும். எல்லா அவதூறுகளையும், பொய்களையும், வஞ்சகத்தையும் விட்டு விலக வேண்டும்.

வேதாகமம் தார்மீகக் கொள்கையை ஆதரிக்கவில்லை. தேவ சத்தியம் முழுமையானது.பொய் இயற்கையாகவே தவறான சுபாவம். தடைசெய்யப்பட்ட ஒரு நாட்டிற்கு நான் பொய் சொல்லி வேதாகமத்தை கடத்துவது தவறானதா? வேதாகமத்தை பிறருக்கு கொடுப்பதிலே மனுஷனுடைய கட்டளையை மீறி, தேவ கட்டளைக்குச் செவிசாய்க்கலாமா?

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அதிகாரிகளின் கேள்வியை எந்தவிதத்திலும் நேரடியாக எதிர்கொண்டால், சிறைவாசத்திலும் கூட என்னால் உண்மையை மறுக்க முடியாது.

ஏமாற்றுதலும், பொய்யும் மீறுதலே.ஆகவே அது அச்சமயத்திற்கு  நற்காரியத்திற்கு உதவினாலும், முடிவிலே அழிவுக்கு நேராக கொண்டு சென்றுவிடும். இரட்சிப்பின் பாதி அழகு நம் வாழ்வின் பரிசுத்தத்தை உள்ளடக்கியது – ஆம், முழுமையான பரிசுத்தம். அதற்குள் பொய்யை திணிக்கும்போது, பரிசுத்த குலைச்சலாகி விடும்.

### நீதியைக் குறித்து பெற்றோர்களுக்கான அறிவுரை என்ன?

முதலாவது, பெற்றோர்களாகிய நீங்கள்  செம்மையாய் உங்கள் குழந்தைகளுக்கு முன்பதாக நடவுங்கள்.ஒரு குழந்தை , தான் தெரிந்துகொள்ள விரும்பும் அனைத்தையும் வெளிப்படுத்துவதில், பெற்றோர் புத்திசாலித்தனமாக செயல்படாவிட்டால்,குழந்தைகள் பொய் சொல்ல காரணமாகி விடலாம்.சில பெற்றோர் பிள்ளைகளிடம் சிலவற்றை செய்து தருவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு, அதை நிறைவேற்ற மாட்டார்கள். இது குழந்தைகளின் மனநிலையில் மாற்றத்தை உண்டாக்கும். இதை வைத்துதான் சொன்னதை செய்கிறார்கள் எனும் மனநிலைமை குழந்தைகளிடம் வளரும்.அவர்களுடைய அனுபவத்திலிருந்து குழந்தைகள் புரிந்துகொள்வார்கள்

இரண்டாவது, பெற்றோர்கள் நேர்மையின் முக்கியத்துவத்தை சிறுவயதிலேயே தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும்.2 முதல் 3 வயதில் இருக்கும்போதே குழந்தைகள் பொய் சொல்ல பழக ஆரம்பிக்கிறார்கள். 4 வயதை எட்டும்போது அவர்கள் பொய்க்கும் உண்மைக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்கிறார்கள்.ஆகவே தங்களுடைய சிறுசிறு தவறுகளை மறைக்க பார்ப்பார்கள்.அதை சிறுவயதிலேயே சரிப்படுத்தாவிட்டால், பொய் கூறுதலும் அவர்களோடு சேர்ந்து வளர்ந்து விடும்.ஒரு ஆய்வில் 96% இளம் குழந்தைகள் ஒவ்வொரு சமயங்களில் பொய் கூறுபவர்களாக உள்ளனர்.பலர் ஒரு நாளைக்கு பலமுறை பொய் கூறுபவர்களாக உள்ளனர்.

குழந்தையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும். அதை அவ்வப்போது பெற்றோர்கள் சரிசெய்ய வேண்டும்.நல்லொழுக்கங்களும் நல்ல பழக்கங்களும் பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட வேண்டும்.நேர்மறை, எதிர்மறை விளைவுகளோடு தவறுகள் திருத்தப்பட வேண்டும்.

### யாரோ ஒருவர் என்னிடம் கேட்ட கேள்விக்கு, உடனடியாக நான் கூறிய பதில் உண்மை யானதாக இல்லையெனில் நான் பாவம் செய்தவரா?

ஒருவரை வேண்டுமென்றே வஞ்சிக்கும்படி, திட்டமிட்டு, ஏமாற்றுவது பாவம்.ஆகையால் உங்களை தற்காத்துக்கொள்ளும் நோக்கத்தில் உடனடியாக யோசிக்காமல் சொல்லி, பின்புதான் அதை அறிவதால் அது பாவமில்லை. எப்படியானாலும், நீங்கள் அந்த மனிதரிடத்தில் திரும்பி போய், நீங்கள் சொன்னதை சரிசெய்து கொள்ள வேண்டும். நீங்கள் அறியாமல் செய்ததால் சரி செய்து விடலாம்.ஆனால் வேண்டுமென்றே திட்டமிட்டு ஒருவருக்கு விரோதமாக பொய் கூறினால் அதை சரி செய்ய முடியாது.ஆகவே இப்படிப்பட்ட சுபாவமுள்ளவர்கள் மனந்திரும்பி குணப்பட வேண்டும்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section
TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?

76 % மக்கள் சில இடங்களில் பொய் ஏற்றுக் கொள்ளப்படுவதாக நம்புகின்றனர்.24.1 % ஆண்கள் பேஸ்புக்கில் பொய்யான தகவலைக் கொண்டுள்ளனர்.பெண்களில் 16.6% பேர் .21.7% ஆண்கள் தங்கள் குறிப்புகளைக் கொண்ட பயோ டேட்டாவில் பொய்யான தகவல்களைக் வைத்துள்ளனர். அதுபோல பெண்கள் 16.3 %, 51.7% பெண்கள் தங்கள் எடையை பொய்யாய் கூறுகிறார்கள்.28 % ஆண்கள். 3 % பேர் ( 1254 நபர்களைக் கணக்கிட்டபோது ) அடிக்கடி பொய் பேசுபவர்கள்.66 % எப்போதாவது பொய் பேசுவார்கள்.பொதுவாக பெண்கள் தங்கள் பெற்றோரிடமும் ஆண்கள் தங்கள் நண்பர்களிடமும் பொய் பேசுவது குறைவு. (2014 ஆம் வருட ஆய்வு அறிக்கை)

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## வெறுமையான தொட்டி

(சீனர்களுடைய பழமையான கதைகளுள் ஒன்று)



பிங் என்று அழைக்கப்படும் ஒரு சிறு சீன பையனைக் குறித்த கதை.அவன் மலர்களை அதிகமாக விரும்புபவன். ஆகவே அவன் வளர்த்த அனைத்து செடிகளும் அழகான நிறைய மலர்களை தந்தது.பிங் வாழ்ந்த பகுதியின் ராஜ்யத்தை ஆண்ட மன்னருக்கு வாரிசு இல்லாமல் இருந்தது.ஆகவே அவருக்குப் பின் நாட்டை ஆள ஒருவர் தேவை.அந்தப் பேரரசருக்கும், தோட்டக்கலையில் மிகுந்த விருப்பமுண்டு.எனவே தன் ராஜ்யத்திற்குட்பட்ட சகல பகுதிகளிலும் உள்ள ஆண் மக்களுக்கு மலர் விதைகளைக் கொடுத்து,இதில் யார் அழகான பூக்களைத் தருகிறீர்களோ, அவர்கள்தான் நாட்டின் அடுத்த மன்னராக முடிசூட்டப்படுவார் என்று அறிவித்திருந்தார்.பிங்க் அழகான ஒரு பூந்தொட்டியில் வளமான மண்ணைப் போட்டு, மிக கவனமாக விதைகளை போட்டு, தினமும் தண்ணீர் ஊற்றி வந்தான்.ஆனால் ஒன்றும் முளைக்கவில்லை.

மற்றவர்கள் எல்லோருடைய பூந்தொட்டிகளிலும் மலர்கள் மலர்ந்திருந்தது.அவர்கள் பிங்கின் காலியான பூந்தொட்டியைக் கண்டு, கேலி செய்து சிரித்தார்கள்.எனவே பிங்க் மீண்டும் அந்த தொட்டியிலுள்ள மண்ணை வளமாக்கி உரமிட்டான்.எந்த பயனும் இல்லை.

ஒருநாள் எல்லாரும் தங்களுடைய அழகான மலர்களைக் கொண்டு வந்து அரண்மனையில் நின்றார்கள்.அரசர் எல்லாரையும் கோபத்தோடு நோக்கினார்.பிங்கின் வெறுமையான பூந்தொட்டியைக் கண்டு அதை உற்று நோக்கினார். என்ன பிங்க் நீ வெறுமையான தொட்டியை கொண்டு வந்துள்ளாயா? பிங்க் தலையை அசைத்து ஆம் அரசே நான் எவ்வளவோ முயற்சித்தும் என் விதைகள் வளராதது எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது என்றான்.

பேரரசர் பிங்கை அணைத்துக் கொண்டு நான் உங்களுக்கு இப்போது புதிய அரசரை அறிமுகம் செய்ய போகிறேன்.நான் அளித்த விதைகள் யாவும் வேகவைக்கப்பட்டது.அவைகள் முளைக்காது. பிங்க் நேர்மையானவன்.

இப்போது உங்களுக்குப் புரிகிறதா? நாம் நேர்மையானவர்களாக இருக்கும்போது, நம்மைச் சுற்றியுள்ளவர்களால் நெருக்கங்களைச் சந்தித்தாலும், முடிவில் நமக்கு அங்கீகாரம் உண்டு. உங்கள் பாத்திரம் வெறுமையாயிருந்தாலும் பரலோக தகப்பன் ஏற்றவேளையில் உங்களை நிரம்பி வழிகிற ஆசீர்வாதத்தினால் நிரப்புவார். ■

CONTACT :-

The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316